TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066958

1. District மாவட்டம் : திருவாரூர் PS: காவல்நிலையம் V&AC Year ஆண்டு 2020 FIR No. மு.த.அ. எண் 04/2020 Date நாள் 23/10/2020

2. (i) Act சட்டம்: U/s. 7 of Prevention Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: of Corruption Act Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 1988 as amended 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை I demand 20.10.2020 நேரில் / வணியமாக
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை II demand over cell phone at 0920 hrs on 21.10.2020
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time நேரம் Complainant arrived V&AC office 23.10.20 15.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் FIR – 23.10.20 14.30 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 5 Km கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் திருவாரூர்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ஜெ. செந்தில்குமார்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ஜெப. கோவிந்தராஜ
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 48/2020
(d) Nationality : நாட்டினம்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்
(g) Address முகவரி 222 பெரியார் தெரு சோழாங்கநல்லூர், ஆண்டிக்(வ) திருவாரூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
ரா. சுந்தரலிங்கம், வட்டார வளர்ச்சி அலுவலர், திருவாரூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
வாதியால்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u>

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் திரு. B.V.நந்தகோபால் ஆகிய நான் 23.10.2020ம் தேதி 13.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு.G. செந்தில்குமார் என்பவர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர். G. செந்தில்குமார், த/பெ. கோவிந்தராஜ்,222, பெரியார் தெரு, சோழங்கநல்லூர், ஆமூர் (Po),திருவாரூர். பெறுநர் : உயர்திரு காவல் துணை கண்காணிப்பாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா. நான் எனது குடும்பத்துடன் சோழங்கநல்லூர் பெரியார் தெருவில் வசித்து வருகிறேன். நான் 10வது வரை படித்துள்ளேன். நான் தி.மு.க கட்சியில் உள்ளேன். தி.மு.க கட்சியின் திருவாதிரைமங்கலத்தின் ஊராட்சி செயலராக கடந்த 10 வருடங்களாக உள்ளேன். எனது மனைவி பழனியம்மாள் திருவாதிரைமங்கலம் ஊராட்சி மன்ற தலைவியாக ஜனவரி 2020 முதல் பதவியில் உள்ளார். எனது மனைவி ஊராட்சி மன்ற தலைவியாக இருப்பதால் அவருடன் திருவாரூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு எப்போதாவது செல்வது வழக்கம். இதனால் திருவாரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் அலுவலர்களை எனக்கு தெரியும். கடந்த வாரம் திருவாதிரைமங்கலம் ஊராட்சியின் கணக்குகள் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி அலுவலகத்தில் தணிக்கை செய்தார்கள். கடந்த 20.10.2020 ந் தேதி திருவாரூர் ஊராட்சி

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 23/10/20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 23/10/20

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B.V. நந்தகோபால் ..........................
Rank: நிலை DSP / VBAC ........ No. எண் .........
திருவாரூர்

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

ஒன்றிய அலுவலகத்தில் அனைத்து ஊராட்சியின் ஊராட்சி மன்ற தலைவர்களுக்கும் கூட்டம் நடத்தப்பட்டது. அன்று எனது மனைவி கலந்து கொள்ள முடியாததால் செல்லவில்லை. இதற்கு முதல்நாள் திங்கள்கிழமை திருவாரூர் தாலுக்கா, வைப்பூர் ஊராட்சி மன்ற தலைவர் பாவாடைராயன் மறுநாள் மீட்டிங் இருப்பதாகவும், என்னை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. சுந்தரலிங்கம் அவர்கள் மீட்டிங் முடிந்தவுடன் வந்து அவரை பார்க்க சொல்லுங்கள் என்று சொன்னதாக சொன்னார். அதனால் 20.10.2020 ந் தேதி மதியம் 01.00 மணியளவில் மீட்டிங் முடிந்தபிறகு வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. சுந்தரலிங்கம் அவர்களை அவரது அலுவலக அறைக்கு சென்று சந்தித்தேன். அப்போது திரு. சுந்தரலிங்கம் அவர்கள் பஞ்சாயத்து கணக்கு தணிக்கை முடிந்துள்ளது, சில ஆவணங்களில் ஊராட்சி மன்ற தலைவியான உங்கள் மனைவி கையொப்பம் செய்யாமல் உள்ளார், நன்னிலம் பகுதியெல்லாம் சார்ஜ் போட்டு கொண்டு இருக்கிறோம், உங்களுக்கு பிரச்சனை வராம இருக்கனும்னா, ரூ.30,000/- பணம் கொடுங்கள் என்று கேட்டார். மேலும் நான் சும்மா கேட்கவில்லை, வாகன பழுது பார்க்க வேண்டிய செலவு இருக்கிறது, அதற்குதான் கேட்கிறேன் என்று சொன்னார். நான் என் மனைவியிடம் செய்தியை சொல்கிறேன் என்று சொல்லி விட்டு வீட்டிற்கு சென்று விட்டேன். எனது மனைவியிடம் இந்த விபரத்தை அன்றைய தினமே நான் சொன்னேன். அதற்கு என் மனைவி நீங்கள் சாரிடம் பேசுங்கள் கணக்கில் என்ன பிரச்சனை என்று கேட்க சொன்னார், அதற்காக 21.10.2020 ந் தேதி 09.15 மணியளவில் எனது செல்போன் எண் : 9445796990 என்ற எண்ணிலிருந்து BDO திரு. சுந்தரலிங்கம் அவர்களின் செல்போன் எண் : 9443709545 என்ற எண்ணிற்கு பேச முயற்சித்த போது கால் கிடைக்கவில்லை, காலை 09.20 மணியளவில் BDO சுந்தரலிங்கம் அவர்களே எனது செல்போனில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது அவர் இதுவரை பணம் கேட்டிருக்கிறேனா, வண்டி செலவுக்கு பணம் தேவைப்படுகிறது, வொர்க்ஷாப்லிருந்து வண்டியை எடுக்கணும் நான் கேட்ட தொகை ஒன்னும் பெரிய அமௌண்ட் இல்லை குடவாசல் பக்கம் எல்லாம் AD சார்ஜ் போடறார் என்று சொன்னார். அதற்கு நான் பணம் கஷ்டமாக இருக்கிறது ரூ.20,000/- ஆக குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு BDO சரி கொண்டு வாருங்கள் என்று சொன்னார், இவர் கேட்ட பணத்தை நான் கொடுக்கவில்லையென்றால் ஊராட்சி மன்ற தலைவியாக உள்ள எனது மனைவிக்கு தொந்தரவு கொடுப்பார் என்று எனக்கு பயமாக உள்ளது. மேலும் இவர் BDO சுந்தரலிங்கம் லஞ்சமாக கேட்கும் பணத்தை எனக்கு கொடுக்க விருப்பம் இல்லை, இவர் கேட்ட பணத்தில் என்னால் இப்போது ரூ.10,000/- தான் என்னால் புரட்ட முடிந்தது. இது குறித்து எனக்கு மனஉளச்சல் ஏற்பட்டதால் சுகர் பிரஷரினால் உடல் நிலை சரியில்லாததால் உடனடியாக என்னால் புகார் கொடுக்க வர முடியவில்லை. என்னிடம் லஞ்சம் கேட்ட மேற்படி BDO சுந்தரலிங்கம் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். Sd (G.செந்தில்குமார்) 23.10.2020... அய்யா மேற்படி புகாரை 13.00 மணியளவில் பெற்றும், முதல் விசாரணை செய்தும் இந்த புகார் மீது 14.30 மணியளவில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண் 04/2020 ச/பி 7 of PC Act 1988 as amended 2018 ன் படி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. Sd (B.V. நந்தகோபால்) 23.10.2020 DSP, V&AC, TVR.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகளுடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

B.V. [signature] 23/10/20
DSP, V&AC, TVR.